ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
திகதி 2025.07.28

## *'டிஜிட்டல் கொடுப்பனவுகள் ஊடாக எதிர்காலத்தை வடிவமைத்தல்'*

## இலங்கை மத்திய வங்கி தம்புள்ளையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஊக்குவிக்கின்றது

இலங்கை மத்திய வங்கி, அதன் 2025 ஆம் ஆண்டுக்கான டிஜிட்டல் கொடுப்பனவு ஊக்குவிப்புப் பிரச்சாரத்தின் தொடராக 2025 ஓகத்து 1 ஆம் மற்றும் 2ஆம் திகதிகளில் மு.ப 9.30 மணி முதல் பி.ப 7.00 மணி வரை தம்புள்ளை பிராந்தியத்தில் தம்புள்ளை விஷேட பொருளாதார மையத்தில் டிஜிட்டல் கொடுப்பனவுகள் ஊக்குவிப்பினை முன்னெடுக்கவுள்ளது. இந்நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர். முனைவர். பி நந்தலால் வீரசிங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஏனைய அலுவலர்கள் கலந்துகொள்கிறார்கள்.

நிதியியல் உள்ளாக்கத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சியினை இயக்குவதிலும் நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரிப்பதிலும் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் இன்றியமையாத வகிபாகத்தைக் கருத்திற்கொண்டு,***'டிஜிட்டல் கொடுப்பனவுகள் ஊடாக எதிர்காலத்தை வடிவமைத்தல்'*** என்ற தொனிப்பொருளின் கீழ் இந்நாடளாவிய பிரச்சாரத்தை இலங்கை மத்திய வங்கி தொடங்கிவைத்தது. இதனடிப்படையில், பாதுகாப்பான, மிகவும் வசதியான மற்றும் பணத்திற்கான வினைத்திறன்மிக்க மாற்றுவழியாக டிஜிட்டல் கொடுப்பனவுகளைக் கொண்டு இலங்கையர்களை வலுவூட்ட இப்பிரச்சாரம் முனைகின்றது. இந்த பிரச்சாரத்தின் பாகமொன்றாக, இலங்கை மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களுடனும் ஏனைய ஆர்வலர்களுடனும் கூட்டிணைந்து இவ்வாண்டின் தொடக்கத்தில் அம்பாந்தோட்டையிலும் நுவரெலியாவிலும் இரு நிகழ்வுகளை வெற்றிகரமாக நடாத்தியது.

வங்கிகள், நிதிக் கம்பனிகள், இலத்திரனியல் பணச்சேவை வழங்குநர்கள் (அதாவது, செல்லிட வலையமைப்பு தொழிற்படுத்துநர்கள்) மற்றும் தேசிய வாடிக்கையாளர் கொடுப்பனவு வலையமைப்பின் தொழிற்படுத்துநரான லங்காபே (பிரைவேட்) லிமிடெட் என்பன இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ளன. புதிய கணக்குகளைத் ஆரம்பித்தல், செல்லிடக் கொடுப்பனவுச் செயலிகளுக்கு பதிவுசெய்தல், உற்பத்திகள் மற்றும் பணிகள் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், டிஜிட்டல் கொடுப்பனவுகளைப் பயன்படுத்தும் போது எதிர்கொள்ளும் ஏதேனும் சிக்கல்களை தீர்த்துக்கொள்ளல், டிஜிட்டல் கொடுப்பனவுகள் தொடர்பிலான வேறு ஏதேனும் கருமங்கள் தொடர்பிலான உதவிகளை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருக்கும். நிகழ்வில் கலந்துக்கொள்ளவிருக்கும் பல்வேறு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான வணிக நிறுவனங்களிலிருந்து பொதுமக்கள் பொருட்கள் மற்றும் பணிகளை கொள்வனவு செய்யவும் டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளைப் பயன்படுத்தும் போது பிரத்தியேக விலைக்கழிவினை பெற்றுக்கொள்ளவும் முடியும்.

இதற்கு மேலதிகமாக, இந்நிகழ்வின் போது இலங்கையின் கொடுகடன் தகவல் பணியகம் (Credit Information Bureau - CRIB) வழங்கும் சேவைகள் குறித்த தகவல்களையும், கோரிக்கையின் மீது, தங்களது இலவச CRIBஅறிக்கைகளையும் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருக்கும்.

மேலும், LANKAQR கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளல் வசதியினைப் பெற்றுக்கொள்வதற்காக தம்புள்ளை, ஹபரன மற்றும் சிகிரியா பிரதேசங்களில் அமைந்துள்ள வணிக நிறுவனங்களுக்கு வசதியளிப்பதற்கு 2025 யூலை 29 முதல் 31ஆம் திகதிகள் வரை நிதியியல் நிறுவனங்கள் மற்றும் லங்காபே மூலம் சிறப்பு வணிகர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படவுள்ளது.

டிஜிட்டல் கொடுப்பனவுகள் பற்றிய அறிவை மேம்படுத்துவதற்கும் நிதியியல் நிறுவனங்களின் தனிப்பட்ட வழிகாட்டல் மற்றும் உதவியுடன் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் சௌகரியத்தை அறிந்துகொள்வதற்கும் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் இலங்கை மத்திய வங்கி அழைப்புவிடுக்கிறது.